பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

11 08 2026 6 45 செய்தி ஆசிரியர்

செவ்வாய்க்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

1. ஊட்டச்சத்து இயக்கத்தின்கீழ் தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளி மாணவர்களுக்கு போதிய உணவு தானியங்கள் வழங்கப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. மாணவர்கள் தொடர்பான அனைத்து விவகாரங்களுக்கும் தீர்வு காண்பதற்கு அரசு தயாராக உள்ளது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் அரசு கல்வியியல் கல்லூரிகளில் எம்.எட், மாணாக்கர் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப் பதிவு இன்று முதல் தொடங்குகிறது.

4. தமிழகத்தில் சென்னை, விழுப்புரம், சிவகங்கை உள்ளிட்ட மாவட்டங்களின் ஒருசில பகுதிகளில் இன்று மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மதுரை அணி 36 ரன் வித்தியாசத்தில் சேலம் அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஊட்டச்சத்து இயக்கத்தின்கீழ் தமிழகத்திற்கு போதிய உணவு தானியங்கள் வழங்கப்படுவதாக மத்திய கல்வித்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்காக கடந்த நிதியாண்டில் தமிழகத்திற்கு 90 ஆயிரத்து 476 மெட்ரிக் டன் அளவு உணவு தானியங்கள் அளிக்கப்பட்டதாக கூறினார்.

இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான செலவுகளுக்கு முழு நிதியுதவியை மத்திய அரசு வழங்குவதாகவும் திரு. ஜெயந்த் சௌத்ரி குறிப்பிட்டார்.

<<<<>>>>

கலை மற்றும் கலாச்சார திட்டத்தின்கீழ் தமிழகத்தைச் சேர்ந்த கலைஞர்களுக்கு மத்திய அரசின் சார்பில் நிதியுதவி வழங்கப்படுவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், குரு-சீடர் பாரம்பரியத்தை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ் கடந்த நிதியாண்டில் தமிழகத்தைச் சேர்ந்த 24 நிறுவனங்களுக்கு ஒரு கோடியே 91 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

கலாச்சாரத்துறையில் சிறந்த சாதனைகள் படைப்பதற்கான திட்டத்தின் மூலம் 29 கலைஞர்களுக்கு 38 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டதாகவும் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறினார்.

<<<<>>>>

மாணவர்களுக்கு உரிய நேரத்தில் கல்வி உதவித் தொகை வழங்கப்படுவதன் மூலம் அவர்கள் தங்களது கல்வியில் திறம்பட கவனம் செலுத்த முடியும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நாடு முழுவதும் தேசிய கல்வி உதவித் தொகை இணையதளம் மூலம் வேளாண்துறை மாணவர்களுக்கான உதவித்தொகையை அவர் விடுவித்தார்.

இதன் மூலம் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேளாண்துறை மாணவர்களுக்கு 21 கோடி ரூபாய்க்கும் மேலான தொகை அவர்களது வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக பரிமாற்றம் செய்யப்பட்டது.

அப்போது பேசிய திரு. சிவ்ராஜ் சிங் சௌஹான், நேரடி பணப் பரிமாற்றம் மூலம் வேளாண்துறை மாணவர்கள் நிதியுதவியைப் பெறுவதில் ஏற்படும் தாமதம் தவிர்க்கப்படும் என்று தெரிவித்தார்.

வேளாண்மையின் எதிர்காலத்திற்கு மாணவர்களை தயார் செய்ய வேளாண் கல்வி, ஆராய்ச்சி, பயிற்சி முறை ஆகியவற்றை வலுப்படுத்த வேண்டும் என்று திரு. சிவ்ராஜ் சிங் சௌஹான் வலியுறுத்தினார்.

<<<<>>>>

அரசு மின்னணு சந்தை மூலம் உரிய நேரத்தில் தேவையான பொருட்களை கொள்முதல் செய்ய முடிவதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற அரசு மின்னணு சந்தை தொடங்கப்பட்ட 10ஆம் ஆண்டு நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த வசதி அறிமுகப்படுத்துவதற்கு முன்பாக

அரசு நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகவும், கொள்முதலில் வெளிப்படைத்தன்மை கடைபிடிக்கப்படவில்லை என்றும் கூறினார்.

ஆனால் தற்போது அந்த சூழல் கிடையாது என்று அவர் தெரிவித்தார்.

அரசு மின்னணு சந்தை மூலம் 20 லட்சம் கோடி ரூபாய்க்கும் மேலான மதிப்புடைய பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

<<<<>>>>

மாணவர்கள் தொடர்பான அனைத்து விவகாரங்களுக்கும் தீர்வு காண்பதற்கு அரசு தயாராக உள்ளது என்று மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இவ்விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் பதிலளிக்க உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தயாராக இருப்பதாக கூறியுள்ளார்.

பதில்களை எதிர்நோக்கியுள்ள எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி அவற்றைக் கேட்பதற்கு அவையில் இருக்க வேண்டும் என்று டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் அரசு கல்வியியல் கல்லூரிகளில் எம்.எட், மாணாக்கர் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப் பதிவு இன்று முதல் தொடங்குகிறது.

இதுகுறித்து மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இம்மாதம் 20ஆம் தேதி வரை இந்த விண்ணப்ப பதிவு நடைபெற உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

மாணவர்கள் www.tngasa.in என்ற இணையதளம் வாயிலாக பதிவு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் இதற்கான தரவரிசைப் பட்டியல் இம்மாதம் 25ஆம் தேதி வெளியிடப்படும் என்றும், மாணாக்கர் சேர்க்கை வரும் 27ஆம் தேதி முதல் 31ஆம் தேதி வரை நடைபெறும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

அரசு மருத்துவமனைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு ஆக்கப்பூர்வமான வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், தங்க மோதிரம் கொடுத்தால் மக்கள் அரசு மருத்துவமனைகளை நோக்கி வருவார்கள் என்ற அமைச்சர் திரு. அருண்ராஜின் கண்ணோட்டம் தவறானது என்று குற்றம் சாட்டியுள்ளார்.

ஆட்சிக்கு வந்து 3 மாதங்கள் ஆகியும், அரசு மருத்துவமனைகளில் எந்தவித முன்னேற்றத்தையும் மாநில அரசு மேற்கொள்ளவில்லை என்று திரு. நயினார் நாகேந்திரன் குறை கூறியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் மாணவர்களிடையே போதைப்பொருள் பயன்பாட்டுக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

அதன் ஒரு பகுதியாக திருப்பூரில் மாநகர காவல்துறை சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஏராளமான கல்லூரி மாணவர்கள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte – Sabreesh – 44 Sec)

<<<<>>>>

தமிழகத்தில் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களின்

ஒருசில பகுதிகளில் இன்று மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மற்ற மாவட்டங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், மாலை, இரவு நேரங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

கொலம்பியாவில் நேரிட்ட நிலநடுக்கத்தில் 111 பேர் உயிரிழந்தனர். 87 பேர் காயமடைந்தனர்.

-----------

ஈரான் மீது அமெரிக்க கடற்படை தாக்குதலை நிறுத்தும் வரை ஹோர்முஸ் நீரிணை திறக்கப்படாது என்று ஈரான் அறிவித்துள்ளது.

-----------

இந்திய - அமெரிக்க கடற்படை இடையே வெடிமருந்து அகற்றுதல் கூட்டுப் பயிற்சி கொச்சியில் நேற்று தொடங்கியது.

-----------

சேலம்-கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் காவல்துறையினர் மேற்கொண்ட வாகன சோதனையில் 336 கிலோ போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

-----------

நீலகிரி மாவட்டம் உதகைக்கு கல்லட்டி மலைப்பாதை வழியாக வாகனங்கள் செல்வதற்கு மீண்டும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

-----------

கன்னியாகுமரியில் இருந்து திப்ருகருக்கு இன்று மாலை இயக்கப்படவிருந்த ரயில் சேவை, ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

-----------

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி அரசு மேல்நிலைப் பள்ளியில் பள்ளி மாணவர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கும் முகாமை ஆட்சியர் திரு. சரவணன் தொடங்கி வைத்தார்.

-----------

சதுரகிரி மலையில் காட்டுத் தீ பரவியதையடுத்து, பொதுமக்கள் இன்று சதுரகிரி அருள்மிகு சுந்தர மகாலிங்க சுவாமி திருக்கோயில் செல்வதற்கு அனுமதி கிடையாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

-----------

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ராஜகோபாலசுவாமி திருக்கோவிலின் ஆடிப்பூர விழாவையொட்டி நேற்றிரவு கருடசேவை நடைபெற்றது.

-----------

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி மற்றும் அக புற ஒட்டுண்ணி மருந்து செலுத்தும் முகாம் இன்று தொடங்குகிறது.

-----------

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் ஆட்சியர் திருமதி சினேகா மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களைப் பெற்று குறைகளைக் கேட்டறிந்தார்.

-----------

மெரினா மற்றும் பெசன்ட்நகர் கடற்கரை பகுதிகளில் 32 இடங்களில் இலவச Wi-Fi வசதி சீர் செய்யப்பட்டு நேற்று முதல் மீண்டும் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மதுரை அணி 36 ரன் வித்தியாசத்தில் சேலம் அணியை வென்றது.

திண்டுக்கல்லில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த மதுரை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 195 ரன் எடுத்தது.

196 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய சேலம் அணி, 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 159 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

இன்று மாலை மணி 3.30க்கு தொடங்க உள்ள ஆட்டத்தில் நெல்லை அணி - திருச்சி அணியை எதிர்கொள்கிறது.

இரவு மணி 7.30க்கு தொடங்கும் மற்றொரு போட்டியில் திருப்பூர் அணி - கோவை அணியை எதிர்கொள்கிறது.

------------

Brownsburg சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் பிரதான சுற்றுக்கு இந்தியாவின் Dhakshneswar Suresh பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<< >>>>